தமிழ்நாடு
# நுகர்விழி
மாத இதழ்
நுகர்வோரின் மூன்றாவது கண்!

10/- மலர் - 16 இதழ் - 02 பிப்ரவரி - 2022 TAMILNADU NUGARVIZHI facebook TNCPO Chennai



# சட்டம் அனைவருக்கும் சமம்!

PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI



**Dr.D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநில இளைஞர் அணி தலைவர்
அயன்புரம் மண்டல செயலாளர்
99625 26601



**N.புண்ணியமூர்த்தி**
மாநிலச் செயலாளர்,
தென்மண்டலம்
99411 80631



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
திருவொற்றியூர் மண்டல தலைவர்
99404 77815



**G.அருணகிரி**
தலைவர், கணினி குற்றங்கள்
விழிப்புணர்வு குழு
98410 50681



**M.பிரபாகர்**
மாநில துணைச் செயலாளர்
94443 31396



**L.மயில்வாகனம்**
மாநில அமைப்புச் செயலாளர்
96001 29030



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்
98431 88657



**K.தனசேகர்**
மாநில துணை பொதுச் செயலாளர்
98410 91317



**பிரகளாத்தலாய்**
மாநில உதவித் தலைவர்
99417 95151



**N.ரங்கசாமி**
மாநில இணைச் செயலாளர்
96005 24750



**J.செல்வம்**
மாநில அமைப்பாளர்
82200 82727



**S.ராஜேந்திரன்**
கே.கே.நகர் பகுதி நிர்வாகி
91762 93525



**S. கபிபுல்லா**
பாடி பகுதி ஒருங்கிணைப்பாளர்
74015 55372



**A.ராமதாஸ்**
வடசென்னை மாவட்ட நிர்வாகி
99419 87794

தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்!
மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

### அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

ஆசிரியர்
**தமிழ்நாடு நுகர்விழி**
எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி
தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993

இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு "தமிழ்நாடு நுகர்விழி" பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

## உள்ளே...

ஓட்டுனரும் ஓய்வு எடுக்கட்டும்! 05
நுகர்வோர் ஏமாளிகள் அல்ல! 07
புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்... 8
ஒதுக்கப்படும் பாரம்பரிய உணவுகள் 17

# தமிழகத்தில் தண்ணீர் பாதுகாப்பு அமைச்சகம் அமைக்க வேண்டும்...

தமிழகத்தில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், பெரும்பாலான இடங்களில் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ளது. சென்னையில் முக்கிய குடிநீர் ஆதாரங்களான பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரிகள் வறண்டு போய்விட்டன. இந்த நான்கு ஏரிகளிலும் கடந்த ஆண்டில் 3872 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. தற்போது நிலவரப்படி 261 மில்லியன் கன அடி நீர்தான் இருக்கிறது. நாளொன்றுக்கு சென்னை மக்களின் தாகத்தைப் போக்க 854 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. ஆனால், மாநகர குடிநீர் வாரியம் தற்போது 400 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே விநியோகிக்கிறது.

நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துவிட்டதால் அன்றாட தேவைக்கு கூட குடிநீர் இல்லாமல் சென்னைவாசிகள் திணறி வருகின்றனர். பொதுமக்கள் மட்டுமின்றி, தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்களும் பெரும்சிரமத்துக்கு ஆளாகியுள்ளன.

சென்னையில் மட்டும் சிறு, நடுத்தர மற்றும் நட்சத்திர ஓட்டல்கள் என மொத்தம் 50 ஆயிரம் ஓட்டல்கள் உள்ளன. தற்போது நிலவும் குடிநீர் பஞ்சத்தால் சில தினங்களில் சுமார் 50 சதவீத ஹோட்டல்களை மூடவேண்டிய கட்டாயத்தில் உரிமையாளர்கள் உள்ளனர். தேனாம்பேட்டையில் உள்ள ஒரு பிரபல ஹோட்டலில், தண்ணீர் இல்லாத காரணத்தால் சேவையை நிறுத்த வாய்ப்பு இருப்பதாக தகவல் பலகை வைக்கப் பட்டுள்ளது.

தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில், சில நிறுவனங்கள் தண்ணீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தவும், நீர் மேலாண்மை கொள்கைகளை கடைபிடிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே சென்னையில் கடந்த 200 நாட்களாக மழை பொய்த்துபோன நிலையில், மேலும் வரும் 100 நாட்களை எப்படி சமாளிப்பது என்ற கவலை ஏற்பட்டுள்ளது.

தூய்மை இந்திய திட்டத்தை போல தண்ணீர் பாதுகாப்பு திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது தற்போது அவசியம் என்று கடந்த 20.06.2019 அன்று மக்களவை, மாநிலங்களவை கூட்டு கூட்டத்தில் குடியரசு தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். இந்திய தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவாக 61 கோடி மக்கள் வாக்களித்துள்ளனர். இதன் மூலம் ஜனநாயகத்தின் மீதான நம்பகதன்மை மக்களிடம் அதிகரித்துள்ளது. புதிய இந்தியவை உருவாக்க வேண்டும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மத்தியில் ஆளும் புதிய அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. இந்த நூற்றாண்டின் மிக சவால்களில் ஒன்றாக தண்ணீர் பிரச்சினை உருவெடுத்துள்ளது. குளங்கள், ஏரிகள், உள்ளிட்ட நீர்நிலைகள் இருந்த இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுபோன்ற நீராதாரங்கள் அழிக்கப்பட்டதே தண்ணீர் பிரச்சினைக்கு முக்கிய காரணமாகும். பருவ நிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் அதிகரித்து வருவதால் தண்ணீர் பிரச்சினை தீவிரமடையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே தமிழக அரசு உடனடியாக பருவ மழைக்காலத்தில் பொழியும் மழைநீரை சேமித்து வைக்க குறிப்பாக 600 டி.எம்.சி முதல் 750 டி.எம்.சி வரையிலான நீர் தேக்கும் நிலையங்களை தமிழகத்தில் அமைத்து தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வழிவகை செய்ய வேண்டும். மத்திய அரசில் ஜல்சக்தி என்ற புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதே போல் தமிழகத்தில் "தண்ணீர் பாதுகாப்பு அமைச்சகம்" என்ற அமைச்சகத்தை உருவாக்கி தமிழக மக்களின் நலனை பாதுகாக்க கேட்டுக் கொள்கிறோம்.



டாக்டர்
**N.கண்ணையா**, Phd
முதன்மை ஆசிரியர்



**C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர்
மற்றும் வெளியீட்டாளர்



# ஓட்டுனரும் ஓய்வு எடுக்கட்டும்!

குடும்பத்தோடு பயணம் செய்யும் போது நம்முடன் ஒரு ஓட்டுனரை கூட்டிச் செல்வது வழக்கம். இரவு சமயத்தில் நாம் நல்ல ஒரு தங்கும் விடுதியில் அல்லது நண்பர்கள் வீட்டில் தங்கும்போது ஓட்டுனருக்கு தங்குவதற்கு நல்ல ஒரு இடம் நாம் அமைத்து கொடுப்பது குறைவு. அப்படி இருக்கும் பட்சத்தில் ஓட்டுனர் அவரது வாகனத்திலேயே படுத்து தூங்கும் நிலைமைதான் உருவாகிறது.



ஒரு சில தங்கும் விடுதிகளில் மட்டுமே ஓட்டுனர்களுக்கான ஓய்வு அறை உள்ளது. பெரும்பாலான விடுதிகளில் அதுபோல் இல்லை.ஓட்டுனருக்கு குறைந்தபட்சம் ஒரு 300 ரூபாய்க்கு அல்லது 500 ரூபாய்க்கு அறையெடுத்து கொடுத்து அந்த ஓட்டுநர் நிம்மதியாக தூங்குவதற்கு நாம் வழி செய்வது குறைவு. அடுத்த நாள் நமக்கு நெருங்கியவர்கள் கூட சுகமாக பயணிக்கும்போது முதல் நாள் இரவு சரியாக தூங்கி இருப்பாரா நமது ஓட்டுனர் என்று சிந்தித்து கூட பார்ப்பதில்லை நாம். அந்த வாகனத்தில் பயணிக்கும் அத்தனை பேருடைய உயிரும் ஓட்டுனர் கையில் என்று தெரிந்தும் ஒரு 500 ரூபாய் லாபம் பார்த்து ஓட்டுனருக்கு அறை ஒதுக்கிக் கொடுக்காததற்கு நாம் கொடுக்கும் விலை, ஒரு நிமிடம் தூக்கத்திற்கு தழுவி விழும் ஓட்டுனரின் தவறுதலால் நாம் நஷ்டப்படுவது, நமக்கு பிரியமானவர்களின் உயிரை மட்டுமல்லாமல், நம்மளையும்தான். சிறு குழந்தைகளைக் கொண்டு முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டிருக்கும் நாம் என்றைக்காவது சிந்தித்திருக்கிறோமா? அபாயத்தின் முன்னே தான் அமர்ந்திருக்கிறோம் என்று இனி இருக்கும் யாத்திரையில் சிந்திப்பீர் நமக்கு நெருக்கமானவர்களை போல நம்முடைய ஓட்டுனரையும் நேசியுங்கள்....



**K.தாந்தோணி**
மாநில இளைஞர் அணி தலைவர்
அயன்புரம் மண்டல செயலாளர்



'நுகர்வோர் உரிமை குறித்த விழிப்புணர்வு நம்மில் பலருக்கும் இல்லவே இல்லை. அதனால்தான் விற்பனையாளர்களால் ஒவ்வொரு நாளும் நுகர்வோர் ஏமாளிகள் ஆக்கப்படுகின்றனர்.' என்பது பொதுவான கருத்தாக உள்ளது.

நுகர்வோர் என்றால் யார்? பணம் கொடுத்து ஒரு பொருளை வாங்குபவர்தான் நுகர்வோர். அவரே, பணம் கொடுத்து சேவையைப் பெறுபவரும் ஆகிறார். அந்த வகையில், நாம் அனைவருமே நுகர்வோர்தான். அந்த நுகர்வோருக்கு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் சில உரிமைகளை வழங்குகிறது. 1986க்கு முன், அதாவது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு,நுகர்வோர் தங்களுக்கு இழைக்கப்படும் எல்லா அநீதிகளையும் பொறுத்துக்கொள்ள வேண்டிய அவலம் இருந்தது. அதன்பிறகு, நிலைமை மாறிவிட்டது. எந்த ஒரு நுகர்வோரும், தான் வாங்கிய பொருளில் குறையோ, சேவையில் குறைபாடோ இருந்தால், நுகர்வோர் நீதிமன்றத்தை நாட முடியும். இழந்த நஷ்டத்தை அபராதத்துடன் பெறமுடியும். இதன்மூலம், மற்ற நுகர்வோரும் நஷ்டம் அடையாதவாறு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

விழிப்புணர்வு மிக்க நுகர்வோர் ஒருவர் தொடர்ந்த வழக்கையும், அவருக்குக் கிடைத்த நல்லதொரு தீர்ப்பையும் இங்கே விவரித்திருக்கிறோம்.

விருதுநகரைச் சேர்ந்த சரவணன் என்பவர், 3வது வகுப்பு படிக்கும் தன் மகனுக்கும், 1ஆம் வகுப்பு படிக்கும் தன் மகளுக்கும், கடந்த 30 .5.2016 அன்று இரண்டு ஸ்கூல் பேக்குகளை, அதே ஊரில் உள்ள டாப் பேக் சித்தார்த் அசோசியேட்ஸ் என்ற கடையில், ரூ.1200 விலைக்கு வாங்கினார். இரண்டே வாரங்களில், அந்த பேக்குகளில் ஜிப் மூடும் பகுதி பிரிந்துவிட்டது. இதுகுறித்து அவர் டாப் பேக் கடையில் முறையிட, சரிசெய்து கொடுத்தனர். அதனை வீட்டுக்கு எடுத்துச்சென்று பிள்ளைகளிடம் கொடுத்தார். அதே நாளில், இரு பேக்குகளில் ஒன்றின் கைப்பிடி பிரிந்து வந்துவிடும் நிலையில் இருந்தது. அதனால் மன உளைச்சலுக்கு ஆளான சரவணன், மீண்டும் அந்த பேக் கடைக்குச் சென்று, பேக்குகள் தரமற்றவையாக இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். பதிலுக்கு அக்கடைக்காரர், "பேக் என்றால் அப்படித்தான் இருக்கும்.." என்று அலட்சியமாகப் பேசிவிட்டு, "இந்த பேக் நாங்கள் தயாரித்தது அல்ல. மதுரையில் உள்ள டாப் பேக் பிரைவேட் லிமிடெட்டின் தயாரிப்பு." என்று, வாடிக்கையாளரின்

# நுகர்வோர் ஏமாளிகள் அல்ல!

## தரமற்ற ஸ்கூல் பேக் வழக்கில் 'நச்' தீர்ப்பு!

புகாரை மதுரையில் உள்ள நிறுவனத்தின் மீது திருப்பினர்.

தரமற்ற பேக்குகளை அதிகவிலையில் வாடிக்கையாளர் தலையில் கட்டிவிட்டு, நோகடிக்கவும் செய்ததால் மன உளைச்சலுக்கு ஆளான சரவணன், விருதுநகர் மற்றும் மதுரையில் இயங்கிவரும் 'டாப் பேக்'



நிறுவனத்துக்கு 'லீகல் நோட்டீஸ்' அனுப்பினார். பதில் நோட்டீஸ் அனுப்பிய அந்நிறுவனத்தினர், ஒருகட்டத்தில் வேறு பேக்குகள் தருகிறோம் என்று சமரசத்துக்கு வந்தனர். அப்படியென்றால், வழக்கறிஞருக்காக செலவழித்த தொகையை, அவருக்குக் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார் சரவணன். டாப் பேக் நிறுவனம் மறுத்த நிலையில், வழக்கு தொடர்ந்தார். மூன்று வருடங்களாக, சரவணனுக்காக வழக்கறிஞர் மாரிகுமார் நடத்திய வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அந்தத் தீர்ப்பில், தரமற்ற சோபா குறித்து ராஜஸ்தானில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. சோபா வாங் கிய சிறிது காலத்திற்குள் அதில் பழுது ஏற்பட்டால், அந்த சோபா குறைபாடுள்ள சோபா என்றும், அந்த சோபாவுக்கு உண்டான பணத்தை திருப்பிக்கொடுக்க உத்தரவிடவேண்டுமென்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்கூல் பேக் குறித்த இந்த வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலையை கவனமாக ஆய்வு செய்கின்றபோது, விற்பனையான பேக்குகள் இரண்டு வாரத்திற்குள்ளேயே பழுதடைந்து விட்டதால், அந்தப் பேக்குகள் குறைபாடுள்ள பள்ளி பேக்குகள் என்றும், ராஜஸ்தான் வழக்கு தீர்ப்பின் அடிப்படையிலும், விருதுநகர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம், மேற்படி பிரச்சனைக்கு முடிவு செய்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சரவணனுக்கு பேக்கின் விலையான ரூ.1200ஐ உடனடியாக திரும்பக் கொடுக்க வேண்டுமென்றும், அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் சௌகரிய குறைவுகளுக்கு ரூ.10000 நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்றும், வழக்கு செலவுத் தொகையாக ரூ.3000ஐ கொடுக்க வேண்டுமென்றும் உத்தர விட்டிருக்கிறது விருதுநகர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்.

ரூ.1200 பெறுமான ஸ்கூல் பேக்குகளுக்காக மூன்று வருடங்கள் வழக்கு நடத்தியதை, பாமர பார்வையில் 'இதெல்லாம் வேண்டாத வேலை; கால விரயம்' என்று கூறிவிட முடியும். அதேநேரத்தில், தவறைத் தட்டிக்கேட்டு, நீதி கிடைப்பதற்காக அவர் போராடியதெல்லாம் தன் ஒருவருக்காக மட்டுமல்ல. நுகர்வோர் விழிப்புணர்வு பெறுவோம்!



# புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்...

**10 முக்கிய அம்சங்கள்!**



**இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, இந்தியாவில் வாழும் மக்களின் நுகர்வுத் தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் வர்த்தகத்தின் வளர்ச்சியானது எதிர்பாராத பல மாற்றங்களைக் கண்டிருக்கிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் பல சீர்த்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை நுகர்வோர் நலனைக் கருத்தில்கொண்டு செயல்படும் அமைப்பும் அரசாங்கமும் நன்கு உணர்ந்திருந்தன.**

*இதன் விளைவாக பழைய சட்டத்துக்கு மாற்றாக இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 என்னும் புதிய சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தற்போது நிறைவேற்றப்பட்டிருகிறது. இதிலுள்ள 10 முக்கிய அம்சங்கள் இனி...*

## 1. ஒழுங்குமுறை ஆணையம்

செபி, ஐ.ஆர்.டி.ஏ.ஐ. போன்ற ஒழுங்குமுறை ஆணையங்கள் இருப்பதைப் போல, நுகர்வோர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் நுகர்வோர் பாதுகாப்பை உறுதிசெய்ய மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் குழுக்கள் இருந்தாலும் இவற்றுக்குப் போதுமான அதிகாரம் இல்லையென்பதால், புதிய ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்புக்கு அனைத்து மண்டலங்களிலும் அலுவலகம் இருக்கும் வாடிக்கையாளர்கள் புகார்மீது விசாரணை நடத்தி இழப்பீடு வழங்குவதற்கு இந்த ஆணையத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது மேலும் பொருள்களின் தரத்திற்கு ஏற்படும் இழப்பீட்டுக்குத் தக்க நஷ்ட ஈடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நுகர்வோர் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்பலாம்.

## 2. தவறான விளம்பரம் மற்றும் முறைகேடான வர்த்தகம்

தவறான விளம்பரம் மூலமாக விற்கப்படும் பொருள்கள் தவறானது எனக் கண்டறியும் பட்சத்தில், இரண்டு வருட சிறைத்தண்டனையும் ரூ.10 லட்சம் தொகையும் வசூலிக்கத்தக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதே தவற்றைச் செய்யும்பட்சத்தில், ஐந்து வருட சிறைத் தண்டனையும் ரூ.50 லட்சம்

நஷ்ட ஈடும் வசூலிக்க நுகர்வோருக்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

3. நடிகர்கள் மற்றும் பிரபலங்கள் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள் மூலமாக நுகரும் பொருள்களைப் பற்றித் தவறான முறையில் விளம்பரப்படுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்தச் சட்டம் வழிவகை செய்துள்ளது.

## 4. புகார் செய்யும் முறையில் தாராள மயம்

தற்போது புதிய சட்டப்படி நுகர்வோர்கள் எந்த இடத்தில் இருந்தும் அதாவது மாவட்டம், மாநிலம் எதுவாக இருந்தாலும், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து நுகர்வோர் நீதிமன்றங்களை நாட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5. வீடியோ கான்ஃபரன்ஸ்மூலம் விசாரித்தல்

நுகர்வோர் புதிய சட்டத்தின் படி, சாட்சியாளரையோ புகார்தாரரையோ வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக விசாரிக்க முடியும். இது நுகர்வோருக்குப் பெரிய வரப்பிரசாதமாகும்.



## 6. புகார் ஏன் நிராகரிக்கப்பட்டது?

ஒரு நுகர்வோரின் புகாரை, புகார் தாரரை விசாரிக்காமல் ஆணையத்தால் தள்ளுபடி செய்ய முடியாது மேலும் இது சுமுகமாகத் தீர்க்கப் பட வேண்டிய புகார் எனில், இருவரும் பேசி தீர்த்துக்கொள்ள இந்தச் சட்டத்தில் வழிவகை உள்ளது.

## 7. புகார்களை விரைவில் தீர்வு செய்தல்

தற்போது அதிகமான வழக்குகள் நிலு வையில் இருப்பதால் இந்தச் சட்டம் மூலம் விரைவில் தீர்வு காண்பதற்குப் புதிய நடைமுறைகளைக் கொண்டுவர வழிமுறை உள்ளது.

## 8. முறையற்ற வர்த்தக நடைமுறைகள்

முந்தைய சட்டத்தில் முறையற்ற வர்த்தக நடைமுறைகள் இணைக்கப்படவில்லை. மேலும் ரசீது வாங்காமல் பொருள்கள் வழங்குவது, வாங்கிய பொருள்களைத் திரும்பப் பெறாமல் இருப்பது, சேவைகளை முன்கூட்டியே ரத்து செய்ய முடியாமல் போவது, முன்கூட்டியே கடனைச் செலுத்துவதை அனுமதிக்காதது, கூடுதலாக டெபாசிட் தொகையைக் கேட்பது, அதிகமாக அபராதம் கேட்பது போன்றவை புதிய சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

## 9. உற்பத்தியாளரின் பொறுப்பு

புதிய சட்டத்தில் உற்பத்தியாளர் அல்லது சேவையை வழங்குபவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவையால் வாடிக்கையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் புதிய சட்டத்தின்கீழ் இழப்பீடு பெறமுடியும்.

## 10. கலப்படத்துக்கு உண்டான தண்டனைகள்

எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாத கலப்படமாக இருந்தால் ஆறு மாதம் சிறைத் தண்டனையும், ரூ.3 லட்சம் அபராதமும் விதிக்கப்படும். இதன் மூலம் இனி கலப்படம் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

இதைப்போல, பல புதிய திருத்தங்களும் வழிமுறைகளும் நுகர்வோருக்குச் சாதகமாக இந்தச் சீர்திருத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் இடம் பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்.

# வெள்ளிக்கிழமைகளில் கைது செய்யக் கூடாது

## நீதிபதி அறிவுரை



**ஜாமீன் கிடைப்பதை தடுக்கும் வகையில் வெள்ளிக்கிழமைகளில் கைது செய்வதை தவிர்க்க வேண்டும் என்று போலீஸாருக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியது.**

வரதட்சணைக் கொடுமை தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தர விட்ட நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் இதுதொடர்பாக பிறப்பித்துள்ள உத்தரவில், குடும்பப் பிரச்சினைகள், சொத்து தகராறுகள் தொடர்பான வழக்குகளில் கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. குறிப்பாக முன்ஜாமீன் மனுக்கள் அதிகமாக தாக்கல் செய்யப்படுவதை தடுக்க குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 41 ஏ பிரிவின்படி 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கும் சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவருக்கு நோட்டீஸ் அனுப்பி போலீஸார் முறையாக விசாரணை நடத்த வேண்டும் என ஏற்கெனவே நீதி மன்றம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

அதன்படி குடும்பப் பிரச்சினைகள், சொத்து தொடர்பான பிரச்சினைகளுக்காக சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்வதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக கைதாகும் நபர்களுக்கு ஜாமீன் கிடைத்து விடக்கூடாது என்ற எண்ணத்துடன் வெள்ளிக்கிழமைகளில் கைதுசெய்வதைபோலீஸார் அறவே தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

# புதிய நுகர்வோர் சட்டம்



**குளிர்கால கூட்டத் தொடரின் இறுதிநாளில் மத்திய நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ்வான், புதிய நுகர்வோர் பாதுகாப்பு மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார். அனைத்தும் சரியாக நடக்கும் பட்சத்தில் இந்த மசோதா விரைவில் சட்டமாக மாறும் வாய்ப்பு இருக்கிறது. இந்த புதிய சட்டம் 1986ம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்துக்கு மாற்றாக இருக்கும்.**

இதில் மூன்று புதிய பிரிவுகள் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதலாவது பொருட்களில் ஏதேனும் சேதாரம் இருந்து அதனால் வாடிக்கையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அது உற்பத்தியாளரின் பொறுப்பாகும். அடுத்ததாக, நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்படுவது, மூன்றாவதாக சமரச மையமும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.



இந்த புதிய சட்டம் அனைத்து சரக்கு மற்றும் சேவைகளுக்கும் பொருந்தும். வீடு வாங்குவது, கட்டுவது, தொலைத் தொடர்பு சேவைகள், ஆன்லைன் மூலம் வாங்கும் பொருட்கள், டெலி ஷாப்பிங், நேரடி விற்பனை மற்றும் மல்டி லெவல் மார்க்கெட்டிங் என அனைத்தும் புதிய சட்டத்தின் கீழ் வரும்.

# சொல்வது என்ன?

## புதிய நுகர்வோர் சட்டம்:



முந்தைய சட்டத்தில் முறையற்ற வர்த்தக நடைமுறைகள் இணைக்கப்படவில்லை. மேலும் ரசீது வாங்காமல் பொருட்கள் வழங்குவது, வாங்கிய பொருட்களை திரும்ப பெறாமல் இருப்பது, சேவைகளை முன்கூட்டியே ரத்து செய்ய முடியாமல் போவது,முன்கூட்டியேகடனைசெலுத்துவதை அனுமதிக்காதது, கூடுதலாக டெபாசிட் தொகையை கேட்பது, அளவுக்கு அதிகமான அபராதம் கேட்பது போன்றவையும் புதிய சட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

### உற்பத்தியாளரின் பொறுப்பு

புதிய சட்டத்தில் உற்பத்தியாளர் அல்லது சேவையை வழங்குபவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சேவை யினால் வாடிக்கையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் புதிய சட்டத்தின்கீழ் நுகர்வோர்கள் இழப்பீடு பெற முடியும். வடிவமைப்பு குறைபாடு, பொருள் தயாரிப்பில் விதிமுறைகளை பின்பற்றாதது, பொருளை எப்படி பயன்படுத்துவது ஆகியவை குறிப்பிடப்படாதது உள்ளிட்ட சில காரணங்களால் நுகர்வோர் இழப்பீடு பெற முடியும். பழைய விதிகளின்கீழ் இழப்பீடு பெறுவதற்கு அனைத்து காரணங்களையும் நிரூபித்தாக வேண்டும். ஆனால் புதிய மசோதாவில் ஏதேனும் ஒரு காரணத்தை நிரூ பிக்கும் பட்சத்தில் இழப்பீடு கோர முடியும்.




## ஒழுங்குமுறை ஆணையம்

செபி, ஐ.ஆர்.டி.ஏ. போன்ற ஒழுங்குமுறை ஆணையங்கள் இருப்பதை போல, நுகர்வோர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒழுங்குமுறை ஆணையம் அமைப்பது குறித்த திட்டமும் இந்த மசோதாவில் இருக்கிறது. நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்ய மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் குழுக்கள் இருந்தாலும், இவற்றுக்கு போதுமான அதிகாரம் இல்லை என்பதால் புதிய ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட இருக்கிறது.

நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்புக்கு அனைத்து மண்டலங்களிலும் அலுவலகம் இருக்கும். வாடிக்கையாளர்கள் புகார் மீது விசாரணை நடத்தி, இழப்பீடு வழங்குவது குறித்த உத்தரவினை வழங்குவதற்கு இந்த ஆணையத்துக்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. மேலும் தவறான விளம்பரங்கள் மற்றும் முறைகேடான வர்த்தகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

நுகர்வோர்கள் எழுத்துபூர்வமாகவோ அல்லது எலெக்ட்ரானிக் முறையிலோ புகார்களை அளிக்கலாம். மாவட்ட ஆட்சியர் அல்லது நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தின் மண்டல அலுவலகங்களில் புகார் அளிக்கலாம். இந்த ஆணையம் வழங்கியிருக்கும் தீர்ப்பினை செயல்படுத்தவில்லை எனில், அது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆறு மாத சிறை தண்டனை அல்லது 20 லட்ச ரூபாய் வரை அபராதம் விதிக்க ஆணையத்துக்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோல தவறான விளம்பரங்கள், உணவு கலப்படம், போலி பொருட்கள் ஆகியவற்றின் மீது நடவடிக்கை எடுக்க முடியும். தவறான விளம்பரங்களுக்கு இரு ஆண்டுகள் சிறை, ரூ.10 லட்சம் அபராதம் விதிக்க முடியும்.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு தவறான தகவல்களை கொடுக்கும் அல்லது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத விளம்பரங்களில் நடித்திருக்கும் பிரபலங் களுக்கு அபராதம் விதிக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

## சமரச மையம்

தற்போது மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நுகர்வோர் தீர்ப்பாயங்கள் உள்ளன. புதிய சட்டத்தின் படி, இரு தரப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படும் பட்சத்தில் சமரசம் ஏற்படுத்திகொள்ள புதிய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் சமரச மையங்கள் அமைக்க இந்த மசோதா பரிந்துரை செய்கிறது. இந்த மையம் நீதிமன்றத்துக்கு வெளியே சமரசமாக தீர்த்துக்கொள்வதற்கு உதவும்.

ARE YOU A STARTUP OR GROWING ORGANISATION, SPENDING HOURS ON BUILDING YOUR CUSTOMER BASE?

LOOKING FOR BEST SOLUTION PARTNER FOR GST, PF, ESI, AND PAYROLL

# VR Infomines

MINDS to mine your business

Get Additional discount on Quarterly and annual Package on all Services




GST Registration
PAN Registration
TAN Registration

PF & ESI Operation
Accounting
Invoice Management
Payroll Management

**For enquiry mail us:**

**S.Manikandan** MBA, ICWA
Chief finance Consultant, Chennai, TN, India
finance@vrinfomines.com, marketing@vrinfomines.com
Contact us: 9003226935, 6383639667



**G.Arunagiri**
Prop

அமைப்பின் உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் CC TV கேமரா பொருத்தப்படும்.

# SIGMAA TECH SOLUTIONS


igmaa Creating Sustainable Ambience



**We Narrow Down BMS & IBMS**

- CCTV/Security Cameras
- Door Access Control
- Fire Alarm/Burglar Alarm Systems
- Fire Extinguisher/Fire Sprinkler
- Fire Hydrant
- Networking System
- PAS System / Solar System
- GPS Vehicle Traking System

# 107, Lake View Garden, Seeyathaman Koil Street,
Korattur (North), Chennai - 600 076.
**Mobile : 98410 50681 / 98412 71710**
Email: sigmatechsolutions.2007@gmail.com
Website:www.sigmaatechsolutions.com



**நிலத்திலே மனிதர்களால் விளைவிக்கின்ற நன்செய், புன்செய் பயிர்களின் நன்மைகளை எளிதில் சொல்லிவிட முடியாது. இதில் அரிசியானது சுவையும் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டதாகவும் விளங்கி வருகிறது.**

இதில் பச்சரிசி, புழுங்கல் அரிசி இரண்டு வகையும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்தியா, பர்மா, சீனா, ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளில் விளைவிக்கப்படும் அரிசி உலகில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் உண்ணும் உணவாகவும் விளங்கி வருகிறது. ஆனால் இன்று நோய் என்று மருத்துவரிடம் சென்றால் முதலில் சொல்வது அரிசி சோறு சாப்பிடாதீர்கள் என்பதுதான்.


பிறந்தது முதல் அரிசி உணவு சாப்பிட்டு பழகியவர்கள் இதைக்கேட்டதும் வாடி வதங்கி, தங்களுக்கு பெரும் நோய் ஏற்பட்டுவிட்டது என்பதுபோல் முடங்கி விடுகிறார்கள். உண்மையில் மற்ற தானியங்களைப் போலவே அரிசியும் பல்வேறு நன்மைகளை தந்து நம்மை காத்து வருகிறது. உண்மையில் அரிசியை பட்டை தீட்டியும், குக்கரில் வைத்து சாப்பிடுவதால்தான் நமக்கு நோய் உண்டாகிறது என்பது பலருக்கு தெரிவதில்லை. உடலை வளர்த்தால்தான் உயிரை வளர்க்க முடியும் என்பதில் தெளிவாக இருந்தார்கள் நமது முன்னோர்கள். எனவே உடலுக்கு எது தேவையோ அதை மட்டுமே




ஒதுக்கப்படும்
பாரம்பரிய
உணவுகள்











உண்டு நலமாக வாழ்ந்தார்கள். இதில் தமிழர்களின் முக்கிய உணவான சோறு சமைப்பது என்பதே தனிக் கலையாக விளங்கியது எனலாம். இதில் தமிழர்கள் தனித்தன்மை பெற்று விளங்கினார்கள்.

சோறு வடிப்பது என்பது பழைய அரி சியைத் தவிடு, நொய் நீக்கி நன்றாக தீட்டி, முழு அரிசியாய் ஆய்ந்து எடுத்து இளவெந்நீரால் கழுவி சற்று ஆற விட்டுவைத்து கொள்ள வேண்டும். அரிசிக்கு மூன்றுபங்கு நீர்விட்டு அடுப்பிலேற்றி அது நுரைவிட்டு கொதிக்கும் பொழுது அரிசியை அதில் போட்டு முக்காற்பங்கு வெந்தவுடன், கரண்டியால் துழாவி வடித்து கொள்ள வேண்டும். கஞ்சி வடிந்தவுடன், அந்த அடுப்பு தணலில் சோற்று பானையை வைத்து விட வேண்டும். அதன் பிறகு நீர் முற்றிலும் வற்றி பக்குவமாய் இருக்கும் சமயத்தில் எடுத்து கொள்வதே சோறு. இந்த சோறே உணவுக்கு ஏற்றது. வாதம், பித்தம், கபம் ஆகிய முக்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் ஏற்றது. பத்தியத்திற்கும் உகந்தது. ஒவ்வொரு அரிசிக்கும் ஒவ்வொரு பண்பு உள்ளது என்பதையும் சொல்லி வைத்தார்கள்.

முழு அரிசி சோற்றை மிதமான சூட்டுடன் சாப்பிட்டால் முப்பிணிகளையும் நீக்கி உடலுக்கு வனமை தந்து நலத்துடன் வாழவைக்கும். நன்றாக சமையாத சோற்றை உண்பதால் மலம் கட்டும். மறுநாளும் செரிக்காமல் இருக்கும். இதனால் உடலில் இதன் சத்துக்கள் ஊறாது. குழைந்த சோற்றை உண்டால் இருமல், மந்தம், பீளை, மேகம் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படும். மிகுந்த சூட்டுடன் உள்ள சாப்பாட்டை சாப்பிட்டால் ரத்தம் சூடாகும், நீர்வேட்கை அதிகரிக்கும், பெருத்த வயிறு ஏற்படும். எனவே முழு அரிசி சோற்றை மிதசூட்டில் சாப்பிடுவதே நன்மை தரும்.

இதில் கார் அரிசியை கொண்டு வடிக்கப்படும் சோறு உடலில் உள்ள சிறு நஞ்சுகளை நீக்கி புண்களை ஆற்றும். ஈர்க்கச்சம்பா அரிசிசோறு கடவுளுக்கு படைக்கும் உணவிற்கு பயன்படுத்தப்படும் அரிசியாகும். இது பார்த்தவுடன் விருப்பத்தையும் நாவிற்கு சுவையை தரும். புழுகுசம்பா அரிசி சற்று அளவில் நீண்டு

இருந்தாலும் இந்த அரிசியை சமைத்து உண்பதால் உடலில் வனப்பு ஏற்படும். நல்ல பசி எடுக்கும். தீராத தாகம் நீங்கும்.

கோரைச்சம்பா அரிசியை உண்பதால் வெப்பத்தால் ஏற்படும் வெறி, பெண்களுக்கான வெள்ளைபடுதல், உடலில் உண்டாகும் நமைச்சல் நீங்கி, உடல் குளிர்ச்சி உண்டாகும். குறுஞ்சம்பா அரிசிசோறு ஆண்மையை பெருக்கி உடலில் குத்துகின்ற வலியை போக்கும். ஆனால் உடல் சூட்டை உண்டாக்கும். மிளகுசம்பா அரிசி சோறு பல நன்மைகளை வாரி வழங்கக் கூடியது. பசியை உண்டாக்கும். பெருவளி என்கின்ற கடுமையான வாத நோய்களை நீக்கும். சீரகச்சம்பா அரிசி சோற்றை மன்னர்களும், செல்வந்தர்களும் மட்டுமே உண்ணும் பழக்கம் நமது நாட்டில் இருந்து வந்தது.

இனிப்பு சுவையுள்ள இதை உண்பதால் உடலில் ஏற்படும் அனைத்து வளி நோய்



களையும் நீக்கும்.சாப்பிட்டு முடிப்பதற்குள்ளாக செரித்து மீண்டும் பசியை ஏற்படுத்தும் அளவிற்கு எளிமையானது. கல்லுடைச்சம்பா என்ற அரிசி சோறு அதிகமான ஆற்றலை தரக்கூடியது. மிகுந்த பலசாலியை கூட எதிர்க்கும் உடல் திறனையும் மனத்தெம்பும் ஏற்படுத்தும். நல்லசுவை கொண்ட இதை உண்டுவந்தால் பேசும் திறன் அதிகரிக்கும். குன்றிமணிச்சம்பா சோறு உண்டுவந்தால் உடல் வலித்து ஆண்மை உண்டாகும். வளி நோய்கள் அனைத்தும் போகும்.

அழகும் சுவையும் நிரம்பிய அன்னமழகி என்ற அரிசியை சமைத்து உண்பதால் உடல் வெப்ப மாறுபாட்டால் ஏற்படும் சுரங்களை நீக்கி உடலுக்கு நன்மை தரும். மோர்ச்சோறு உண்டால் சிறுநீர் கழிப்பதால் ஏற்படும் எரிச்சல், தண்ணீர் தாகம், வயிற்றுப்போக்கு இவைகளை போக்கும். இரவில் நீரூற்றிய சோற்றை பழையது என்பார்கள். விடியற்காலையில் சோற்றில் உள்ள நீரோடு பழையதை சாப்பிட்டால் ஆண்மை அதிகரிக்கும். உடலில் ஒளி உண்டாகும். வெறிநோய் முற்றிலும் நீங்கும். நன்றாக பசியெடுக்கும்.

பழைய சோற்றில் மோர் கலந்து சாப்பிட்டால் உடல் எரிச்சல், பித்தம், மனப்பிரமை முதலியவை நீங்கும். இரவில் நன்றாக தூக்கம் வரும். மிகுதியாக உண்டுவிட்டால், அப்பொழுதே உறக்கம் கண்களை தழுவும். பொதுவாக எந்த உணவாக இருந்தாலும் அளவாக தேவைக்கு ஏற்ப சாப்பிடுவதால் கெடுதல் என்பதே உண்டாகாது. அதுவும் உணவே மருந்து. மருந்தே உணவு என்று வாழ்க்கை முறையை வகுத்து கொண்டு வாழும் தமிழர்களின் உணவே, இன்று உலகம் முழுவதும் உள்ள மக்களால், பெரிதும் விரும்பும் உணவாகவும் மாறி வருகிறது. எனவே அரிசி சோறு உண்டு நலமுடன் வாழ்வோம்.

## பித்தத்தை போக்கும் கஞ்சி

சோறு கொதிக்கும் போது இருக்கும் நீரை கொதிநீர் என்பார்கள். வீட்டில் சமையல் செய்யும் பெண்கள், பசியுடன் இருக்கும் சிறுவர்களுக்கு இதை குடிக்க கொடுப்பார்கள். தாங்களும் குடிப்பார்கள். இதுவும் மருத்துவ குணம் கொண்டதுதான். கொதிநீரை குடிப்பதால் நீர்சுலுக்கு என்னும் சிறுநீர்நோய் போகும். சோறு வடித்தவுடன் கிடைக்கும் கஞ்சியை சூட்டுடன் தண்ணீர் கலந்து உப்பிட்டு குடிப்பதால் உடல் பருக்கும். உடலில் ஒளி உண்டாகும். உடலில் உண்டாகும் பித்தம், வெப்பம் நீங்கும். சோறு வடித்த கஞ்சியை எந்த வகையில் குடித்தாலும் சிறு மந்தத்தை உண்டாக்கும் என்றாலும், விழிகளுக்கு குளிர்ச்சியும் கொடுக்கும். உடல் சூட்டால் தோன்றிய பல்வேறு நோய்களை குணமாக்கும்

**ஜனாதிபதி தவறு செய்தால்கூட 60 நாள் நோட்டீஸ் கொடுத்து சிவில் வழக்கு தொடரலாம். Article 361(4)**

நீதிபதி தவறு செய்தால் 7 வருடம் சிறை. IPC-217

நீதிபதியை எதிர்மனுதாரராக சேர்த்து அப்பீல் செய்யலாம். CRPC 404

அரசு அலுவலர், அரசு மருத்துவர், காவல் அலுவலர், பணியின் போது கடமையிலிருந்து தவறுதல் 1 வருடம் சிறை. IPC166

எழுத்துக்கூட்டி வாசிக்கத் தெரிந்த எந்த பாமரனும் இந்தியக் குடிமகன் எவரும் தாய்மொழியில் சட்டம் படிக்கலாம்.

சட்டம் படித்த பாமரன் எவரும் வழக்கறிஞரின் உதவி இல்லாமல் தங்கள் வழக்கில் தாங்களே வாதாடலாம். Article 19(1) , CRPC 303,302(2)

வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கலாம். CRPC 309(2) 312.

இந்தியாவில் எந்தவொரு அலுவலகத்திலும் ஆவணம் மற்றும் சான்றிதழ் தாய்மொழியில் கேட்டு பெறலாம். அதற்கான சட்டப்படியான செலவுத்தொகை செலுத்த வேண்டும். IEA-74,76ன் கீழ்

எவர் ஒருவரும் பார்வையிடலாம்.

இந்திய குடிமகன் எவரையும் எவர் தாக்கினாலும் (CRPC 4 படியிலான சங்கதிகள் தவிர) 3ம் நபர் கைது செய்து சிறையில் வைக்கலாம். சட்டையை கழற்றி விடலாம். CRPC-43

ஒரு குற்றம் நடைபெறும் முன்பு நடைபெறாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு காவல் உயர்நிலை அலுவலர்களுக்கும் கீழ்நிலை அலுவலர்களுக்கும் கட்டுப்பாடு உண்டு. CRPC 36, 149.

காவல்நிலையம் மற்றும் நீதிமன்றம் இவற்றிலிருந்து யாருடைய தயவும் இல்லாமல் சொந்த ஜாமீனில் வெளியே வரலாம். செலவு ஐந்து ரூபாய் மட்டுமே. Article 21(2)

கிரிமினல் மற்றும் சிவில் வழக்கு எத்தனை வருடம் நடந்தாலும் செலவுத் தொகை ரூபாய் 50 லிருந்து 100 வரை மட்டுமே பெறலாம். அதீதமான சூழ்நிலையில்தான் வழக்குச் செலவு கூடும். பொய்வழக்கு தாக்கல் செய்தால் IPC211ன்படி 2 வருடம் சிறை தண்டனை உண்டு. சிவில் வழக்கில் மனுதாரர் பக்கம் நியாயமிருந்தால் Mount தொகை திரும்ப வந்துவிடும். மனுதாரர் பொய் வழக்கு தாக்கல் செய்திருந்தால் 50,000 நஷ்ட ஈடு பிரதிவாதிக்கு தரவேண்டும்.

தாலுக்கா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் பெற செலவு ரூபாய் 25 மட்டுமே. அதற்காக RIOffice-லும் VAO ஆபீசிலும் தவம்கிடந்து காத்திருக்க வேண்டியதில்லை.

காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றால் படித்தொகையும், செலவும் சம்பளத் தொகையும் கேட்டுப் பெறலாம்.





CRPC.160(2)

அதீதமான சூழ்நிலையில் மட்டும் கைவிலங்கிட முடியும் மற்றப்படி அன்று Article *21(14)*

புகார் மனுவில் பொய்யான வாதம் வைத்திருந்தால் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் Article 32(8)

பொய் வழக்கில் சிறைதண்டனை பெற்றிருந்தால் ரத்து செய்து விடலாம்.

பொய் என்றும், புனையப்பட்டது என்று தெரிந்திருந்தும் அறிந்திருந்தும் உண்மையைப்போல நேர்மையற்ற முறையில் பயன்படுத்துதல் *7* வருடம் அல்லது *3* வருடம் சிறை தண்டனை உண்டு. IPC *193,196,200*.

முத்திரையே இல்லாத தராசை கைவசம் வைத்திருந்தாலே ஒரு வருடம் சிறை தண்டனை உண்டு. IPC.267

அடுத்தவருடைய அசையும் சொத்தை பொருளை நேர்மையற்ற முறையில் அபகரித்தால் *2* வருடம் சிறை தண்டனை உண்டு..IPC-403

குழந்தை உயிருடன் பிறப்பதை தடுத்தல் மற்றும் பிறந்தபின் இறக்கச் செய்தல் பத்து வருட சிறை தண்டனை உண்டு. IPC-315.

தற்காப்புக்காக செய்யப்படும் எந்தவொரு செயலும் குற்றமில்லை. IPC-96

பிற மதம் நிந்தித்தல், ஆச்சாரம் கெடுதல் *2* ஆண்டு சிறை. IPC-295

மத உணர்வுகளை புண்படுத்துதல் ஒரு வருடம் சிறை IPC-295

ஆள்மாராட்டம் செய்து ஏமாற்றுதல். *3* ஆண்டு சிறை IPC-419

ஏமாற்றும் பொருட்டு போலியாக பத்திரம் தயார் செய்தல் *7*வருடம் சிறை. IPC-468.

சொத்து அடையாள குறியை மாற்றுதல் *3*ஆண்டு சிறை IPC-484

கணவன், மனைவி உயிருடன் இருக்கும் போது மறுமணம் செய்தல் *7* ஆண்டுகள் சிறை. IPC-494

முந்தைய திருமணம் மறைத்தல் *10* வருடம் சிறை. IPC-495

IPC-499 ல் *3* முதல் *9* வரை உள்ள விதி விலக்கு விதியின்படி யாரையும் விமர்சனம் செய்யலாம். நீதிபதியையும் கூட

இதில் IPC என்பது இந்தியன் பீனல் கோட் (இந்திய தண்டனைச் சட்டம்)ஆகும்.

CRPC என்பது குற்றவிசாரணை முறைச் சட்டம் ஆகும்.



# சட்டம் அனைவருக்கும் சமம்!



க டந்த சில நாட்களுக்கு முன்பு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் வீட்டில் இருந்து பணிபுரிந்த பெண்ணுக்கு பென்ஷன் வழங்க உத்தரவிட்டுள்ளது உச்சநீதிமன்றம்.

ஆமாங்க.. இந்த தீர்ப்பு பலரிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதோடு, இது வீட்டிலிருந்து பணிபுரியும் அனைவருக்கும் உதவும் என்றும் கூறப்படுகிறது.

கார்மெண்ட்ஸ் என்று கூறப்படும் ஆயத்த ஆடையகம் நாடெங்கிலும் பரவலாக காணப்படுகிறது. இது போன்ற நிறுவனங்களில் பல பெண்கள், தற்போதும் வீட்டிலிருந்து பணிபுரிந்து கொண்டுதான் உள்ளார்கள். ஆனால் நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள், இவர்களுக்கு கிடைப்பதில்லை.

# வீட்டிலிருந்து பணி புரிந்த பெண்ணுக்கு ஓய்வூதியம்..

## அதிரடி தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம்.. !

**ஊழியர் இல்லை**

ஆமாங்க.. அவர்கள் வீட்டிலிருந்து சொந்த மாக மெஷின் வைத்து தைப்பதால் அவருக்கு ஊழியர் என்ற அந்தஸ்தையும் அந்த குறிப்பிட்ட நிறுவனங்கள் தருவதில்லை. ஊழியர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு சலுகையும் இது போன்ற பணியாளர்களுக்கு தருவதில்லை. மாறாக அவர்கள் மீது பல குற்றங்களை தான் சுமத்துகிறது.

**பல மடங்கு வீட்டிலிருந்துதான் வேலை செய்கிறார்கள்?**

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவெனில் நாட்டில் இதுபோன்ற தொழிற்சாலைகளில் நேரடியாக பணிபுரிவோர் எண்ணிக்கை 1.2 கோடி பேர் ஆகும். இதுவே வீட்டிலிருந்து பணிபுரிவோரின் எண்ணிக்கை இதைவிட பல மடங்கு இருக்கிறது என்றும், கலிபோர்னியா பல்கலைக் கழகம் ஒரு அறிக்கையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**ஓய்வூ ஊதியம் வேண்டும்?**

இதன் மூலம் கண்ணுக்கு தெரியாத ஊழியர்கள் லட்சக்கணக்கில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில்தான் கோதாவரி கார்மெண்ட்ஸ் என்ற நிறுவனத்தில், வீட்டிலிருந்து பணிபுரிந்த ஒரு பெண், தனக்கு ஓய்வூதியம் தர வேண்டும் என்று அந்த



நிறுவனத்தை அந்த பெண் கேட்டுள்ளார். ஆனால் அந்த நிறுவனம் இதை மறுக்கவே அவர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

### துணிகளை தவறாக தைப்பதாக குற்றம்

இந்த நிலையில், அந்த தனியார் நிறுவனம் இவ்வாறு வீட்டிலிருந்து பணிபுரியும் பெண்களை ஊழியர்களாக கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அதிலும் அவர்கள் மேலாளரின் கண்காணிப்பு இல்லாமல் பணிபுரிகின்றனர். இதனால் இதை கணக்கில் வைத்து கொள்ள முடியாது என்றும் மறுத்துள்ளதாம். அதோடு இவ்வாறு வீட்டிலிருந்து தைக்கப்படும் பல துணிகள் தவறான தையல் காரணமாக அது எங்களுக்கு வீணாகிறது என்றும் அந்த நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளதாம்.

### அபராதம் ரூ.10 லட்சம்

எனினும் இந்த பிரச்சனை கலந்து ஆலோசித்த பின்பு உச்ச நீதிமன்றம், பாதிக்கப்பட்ட அந்த பெண்ணுக்கு 10 லட்சம் ரூபாய், வழக்கு செலவு தொகை மற்றும் பென்ஷனாக கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. இந்த நிலையில் இந்த தீர்ப்பு சமூக ஆர்வலர்கள் தரப்பில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதோடு, இதன் மூலம் வீட்டில் பணிபுரியும் அனைவருக்கும், இதன் மூலம் நல்ல பலன் அடைய வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகிறது.




# துணிப் பைக்கும் பணம் வசூலித்த

# பாட்டா நிறுவனத்துக்கு ரூ.9000 அபராதம்

**பாட்டா கம்பெனி, பொருள் தரும் போது பேப்பர் பேக் கொடுத்து அதற்கு மூன்று ரூபாய் வாங்கியது என்று நுகர்வோர் வழக்கு. பாட்டா தன் வாடிக்கையாளருக்கு இலவச பை வழங்க வேண்டும் என்றும், ரூ.9000/ அபராதம் விதித்து சண்டிகர் நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

*காலணிகள் வாங்கிய நுகர் வோரிடம், துணிப் பைக்கும் சேர்த்து பணம் வசூல் செய்த விவகாரத்தில், பிரபல காலணி நிறுவனமான பாட்டா நிறுவனத்துக்கு (bata) 9000 ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.*

*சண்டிகரைச் சேர்ந்த தினேஷ் பிரசாத் ரதிரி என்பவர் அங்குள்ள பாட்டா நிறுவனத்தில் காலணிகள் வாங்கியுள்ளார். அப்போது, காலணிகளை எடுத்துச் செல்வதற்கான துணிப் பைக்கும் சேர்த்து 3 ரூபாய் கூடுதலாக வசூல் செய்ததாகக் கூறப்படுகிறது.*

*இதனால் அதிருப்தியடைந்த அந்த நபர், அங்குள்ள நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் தொடுத்துள்ளார். இதையடுத்து இதனை விசாரித்த நுகர்வோர் நீதிமன்றம், நுகர்வோரின் வழக்கு செலவுத்தொகையாக ஆயிரம் ரூபாய், நுகர்வோரை அலைக்கழித்ததற்கான இழப்பீட்டுத் தொகையாக மூவாயிரம் ரூபாய் மற்றும் அபராத தொகையாக ஐயாயிரம் ரூபாய் என மொத்தம் ஒன்பதாயிரம் ரூபாயை பாட்டா நிறுவனம் செலுத்தவேண்டும் என உத்தரவிட்டது.*

*மேலும், பொருட்களை வாங்கும் நுகர்வோர்களுக்கு இலவசமாக துணிப் பைகளை வழங்குமாறும் அந்நிறுவனத்தை அறிவுறுத்தியுள்ளது.*

# கலெக்சனுக்கு போடப்பட்ட காசோலை காணாமல் போனதால் வங்கி வாடிக்கையாளருக்கு ரூ.25 ஆயிரம் நஷ்ட ஈடு:

**கலெக்சனுக்கு போடப்பட்ட காசோலை காணாமல் போனதால் வங்கி வாடிக்கையாளருக்கு ரூ.25 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

*சிவகாசி சக்தி நகரை சேர்ந்தவர் கிருஷ்ணவேணி. இவருக்கு ஏ.ஜெ., கல்லூரி தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. கடந்த 2013 நவம்பர் 8ல் சுப்பிரமணியம் என்பவர் கொடுத்த ரூ. 3 லட்சத்து 10 ஆயிரத்திற்கான காசோலையை கலெக்சனுக்காக, கிருஷ்ணவேணி போட்டுள்ளார். பணம் வரவும் இல்லை, ரிட்டர்னும் ஆகவில்லை. இரு வாரத்திற்குப் பின் கேட்டபோது,*




*ஸ்டேட் பாங்க் அனுப்பிவிட்டதாகவும், ஆனால் பணமாக்கப்படவில்லை என்பது தெரியவந்தது. இதையடுத்து மனவேதனையடைந்த கிருஷ்ணவேணி, சென்னை ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிற்கு புகார் தெரிவித்தார். இதற்கு 8 மாதம் பின் ரிசர்வ் வங்கி அனுப்பிய பதிலில், ஸ்டேட் பாங்க் அனுப்பியதில் காசோலை காணாமல் போனதால் பணம் வரவு வைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. நீதிபதி உத்தரவு மனஉளைச்சலடைந்த கிருஷ்ணவேணி ரூ. 50 ஆயிரம் நஷ்ட ஈடு , வழக்கு செலவு தொகை வழங்க கோரி, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதை நீதிபதி பாலசுந்தரக்குமார் மற்றும் உறுப்பினர்கள் சங்கர் , கற்பகசெல்வி விசாரித்தனர். இதை தொடர்ந்து கிருஷ்ணவேணிக்கு ரூ.25 ஆயிரம் நஷ்டஈடு , வழக்கு செலவுத்தொகையாக ரூ.3 ஆயிரத்தை ஒரு மாதத்திற்குள் வழங்க, மெர்க்ண்டைல் வங்கிக்கு உத்தரவிட்டனர்.*

# காஞ்சிபுரம் மாவட்ட செய்திகள்













தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் தலைவர் டாக்டர் சி.பால்பர்ணபாஸ் , அவர்கள் ஆலோசனைபடி, நமது செங்காட்டூர் கிராமத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம் நுகர்வோர் பாதுகாப்பு மையம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மக்கள் நல சங்கம் மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் சார்பில் 26.01.2022 அன்று குடியரசு தினத்தை* முன்னிட்டு செங்காட்டூர் கிராமத்தில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் திரு.N.ஜெயபால். அவர்கள் முன்னியில் சிறப்பு விருந்தினராக *டாக்டர் D.C.ஜான்இளங்கோவன். மாவட்ட தலைவர் அவர்கள் தலைமையில் காலை 09.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத் தினார்கள்.மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், பேனா, பென்சில் வழங்கி, பின் வாழ்துரை வழங்கிய திரு. ஏழுமலை. ஆடிட்டர் அவர்களும் மற்றும் மாவட்ட நிர்வாகிகள். திரு.K.மணிகண்டன், திரு.சி.குணசேகரன் திருP.ஹரிஷ், திரு.G.பாலகிருஷ்ணன், திரு.S. பார்த்தசாரதி திரு.அன்பழகன், திரு.ஜி நரேந்திரன், திரு.மரியசெல்வம். கிளை தலைவர். செங்காட்டூர். திரு.பழனி, திரு.பாரதிதாசன் திரு.மாரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இப்படிக்கு. D.**பூஷன் குமார்**,
மாவட்ட பொருளாளர்,
P.R.O

# உணவு பாதுகாப்புத்துறை அனைத்து நெடுஞ்சாலை ஓட்டல்களிலும் சோதனை செய்ய வேண்டும்!

## தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு தீர்மானம்!

**தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு சென்னை "நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்டங்களை" பாமர மக்களுக்கு விழிப்புணர்வு, பயிற்சி போன்றவைகளை கடந்த2003ம் ஆண்டு முதல் பயிற்றுவித்து வருகிறோம்.**

மேலும் தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 75,000 பேர் இப் பேரமைப்பில் உறுப்பினர்களாக உள்ளனர்.

ஐயா, 06.02.2022 (ஞாயிற்றுகிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை எழும்பூர், காந்தி இர்வின் சாலையில் உள்ள "நக்கீரர் அரங்கில்" "நுகர்வோர் பார்வையில் உணவு வணிகம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு இப்பேரமைப்பின் மாநில தலைவர் முனைவர் செ.பால்பர்ணபாஸ்






தலைமை வகித்தார். அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் மாநில தலைவர் டாக்டர். ஜான் இளங்கோவன் மற்றும் நேர்மையற்ற உணவு வணிக நடைமுறை குறித்து கலந்தாய்வு செய்யப்பட்டது. நுகர்வோர்களுக்கு பாதுகாப்பான

உணவு வழங்குவது மற்றும் விற்பனை செய்வது உள்ளிட்ட உணவு விநியோகத்தை தமிழக அரசு கண்காணிக்க வேண்டும் உள் ளிட்ட முக்கிய விவாதங்கள்

விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

தமிழகத்தின் அனைத்து நெடுஞ்சாலை களில் செயல்படும் சிற்றுண்டிகள்,உணவு விடுதிகள் போன்றவற்றை அந்தந்த மாவட்ட நிர்வாகம் சுகாதாரத்துறை, காவல்துறை மற்றும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் அவ்வப்போது சோதனை நடத்திட வேண்டும். கழிப்பிட கட்ட ணங்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடஅதிகமாக கட்டணங்கள் வசூலிப்பதாக எழுந்த புகார்களை தொடர்ந்து கட்டணம் நிர்ணயிக்க அரசு முன்வர வேண்டும்.

உயிருக்கு ஊரு விளைவிக்கின்ற உணவு பொருட்கள் சந்தைகளில் விற்பதை அரசு தடை செய்ய வேண்டும், (உதாரணமாக) கலர் சாயங்களை உபயோகப்படுத்தி செய்கின்ற அப்பளம், சாக்லெட், பிஸ்கட்கள், ஐஸ்கிரீம், அடுமனைகள், அதேபோன்று பலமுறை உபயோகப்படுத்திய எண்ணெய் மூலம் சமைத்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள், போன்றவற்றை தடை செய்ய வேண்டும்.

தேநீர், காபி விற்பனை செய்யும் கடைகளில் தண்ணீர் சூடேற்றி உபயோகப்படுத்தும் "பைலர்" முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். பேப்பர் கப்களை முழுவதுமாக ஒழித்து வெந்நீரால் சுத்திகரிக்கப்பட்ட டம்பளர், பீங்கான், கண்ணாடி டம்ளர், டின் வகைகள் மூலம் நேநீர், காபி விற்பனை செய்ய வேண்டும்.

டீ கடைக்கு லைசென்ஸ் பெற்றுக் கொண்டு உணவுகள் செய்து விற்பனை செய்வது, காலை டிபன், மதியம் சாப்பாடு,




மாலை டிபன் போன்றவற்றை விற்பனை செய்வதை தடுக்க வேண்டும்.

தேநீர் கடைகளில் சிமெண்ட் தொட்டிகள் மூலம் சேமித்த தண்ணீரை உபயோகப் படுத்தி தேநீர்/காபி போன்றவைகள் வழங்கப்படுகிறது. அதை உடனடியாக தடை செய்ய வேண்டும்.

(10) தரமற்ற தேயிலைகள் மூலம் தேநீர் தயாரிக்கப்படுகிறதா என்பதை உணவு பாது காப்பு அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

சென்னை உள்பட அனைத்து மாவட்டங் களிலும் உணவு பொருட்கள் சமைத்து விற்பனைக்கு அனுப்பும் குடோன் கள், சமையல் கூடங்கள் உதாரணமாக சமோசா, பணியாரம், சோன்பப்படி உள்ளிட்ட பல வகையான உணவு பொருட்கள் தயார் செய்து வரும் மேற்கண்ட நிறுவனங்கள் சிலர் லைசென்ஸ் பெறாமல் விற்பனை செய்வது தடை செய்ய வேண்டும். அதேபோல் லைசென்ஸ் பெற்று நடத்தி வரும்

இந்நிறுவனங்கள் சமையலுக்காக உபயோகப்படுத்தும், சமையல் எண்ணெய், மூலப்பொருட்கள், ஊழியர்களின் சுகாதாரப் போக்கு போன்றவற்றை கொண்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகள், பயிற்சி கையேடு அரசு வழங்க வேண்டும். லைசென்ஸ் புதுப்பிக்கும் போதும் இம்முறையே கையாள சம்மந்தப்பட்ட துறை உறுதி படுத்த வேண்டும்.







ஹோட்டல்களில் உணவு களை அதிகமான விலைக்கு விற்பதாகவும், கட்டணம் செலுத்தியபின் பில் ஹோட்டல் நிர்வாகமே தன்வசம் வைத்துக் கொள்கிறார்கள் என்று புகார் எழுந்துள்ளது. எனவே உணவுகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதை தமிழக அரசுக்கு நுகர்வோர் பேரமைப்பு சுட்டிகாட்டுவதுடன் நுகர்வோர் சாப்பிட்டதற்கு பணத்தை செலுத்தியவுடன் அந்த பில்லை பணத்தை செலுத்தியவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று சட்டம் இருந்தும் பெரும்பாலான ஹோட்டல்களில் பில் வழங்கப் படுவதில்லை. எனவே அனைத்து ஹோட்டல்களும் பணம் பெற்றவுடன் நுகர்வோர்களுக்கு பில் வழங்கப் பட வேண்டும்.

குடிசை தொழில் என்ற பெயரில் தயாரிக்கப்படும் நொருக்கு தீனிகள் மற்றும் இதர பொருட்கள் சந்தையில் விற்பனை செய்து வருகிறது. இதில் எவ்வகையான உணவு மூலப்பொருட்கள் உபயோகத்து கிறார்கள் என்பது நுகர்வோர்களுக்கு தெரிவது கிடையாது. பெரும்பாலான பொருட்களில் Manufacture address, Manufacture Date, Expire Date போன்றவைகள் இல்லாமலும், சில பொருட்கள் தெளிவு இல்லாமலும் மொத்த சில்லரை விற்பனை அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டும் அங்கிருந்து சிறு கடைகளுக்கு விற்பனைக்கு வாங்கி செல்கின்றார்கள். இதை உடனடியாக உணவு பாதுகாப்பு துறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மின், இறைச்சி விற்பனை செய்யும் அங்காடிகள், பழைய மீன்கள், இறைச்சிகள் ஐஸ் மூலம் பதப்படுத்தி விற்பனை செய்வதாகவும், சில இடங்களில் கெட்டுபோன உண்ண உபயோகமற்ற மீன்/இறைச்சிகளை விற்பனை செய்து வருகின்றனர். மேலும் மீன்/இறைச்சி வாங்கும் நுகர்வோர்களுக்கு பணம் செலுத்தியதற்கான பில் வழங்குவதில்லை. இதை அரசுக்கு தெரியப்படுத்துவதுடன் சில அபாயகரமான நோய்கள் இதுபோன்ற மீன்/இறைச்சி மூலம் ஏற்படுவதால் பாதிக்கப்பட்ட நுகர்வோர் சட்டரீதியாக நிவாரணம் பெறமுடியாத சூழல் இருப்பதாலும் பில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.

தீர்மானம் 9: சில மெடிக்கல் ஷாப்களில், பிஸ்கட்கள், கூல்டிரிங்ஸ்கள், நொருக்கு தீனிகள், ஐஸ்கிரீம்கள் விற்பனை செய்து வருகின்றார்கள். இதை தமிழக அரசின் சுகாதார துறைக்கும், உணவு பாதுகாப்பு துறைக்கும் தெரியப்படுத்துவதுடன் முறையான நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.

சென்னை உள்பட பல மாவட்டங்களில் துரித உணவு என்ற பெயரில் பாஸ்ட்புட், கோழி இறைச்சி மூலம் செய்யப்பட்ட பலவகையான துரித உணவுகள்மற்றும் பரவலாக பிரியாணி கடைகளில் சுவையை அதிகப்படுத்துவதற்காக அஜினமோட்டோ, கலர் பொடிகள் மற்றும் உடலுக்கு கேடு ஏற்படுத்துகின்ற மசாலா பொடிகள் உபயோகப் படுத்தி வருகிறார்கள். இதனை வாங்கி உண்ணும் நுகர்வோர்களுக்கு கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட பல நோய்கள் வருவதால் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேற்கண்ட இந்த 10 தீர்மானங்கள் இக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொடுகுத் தொல்லை மற்றும் முடி உதிர் தலை கட்டுப்படுத்த, "ஹெர்பல்' சிகிச்சை, அளித்ததில் இளம் பெண் ஒருவர் தலைமுடியை இழந்தார்.

இது தொடர்பான வழக்கில், தனியார் நிறுவனம், 7 லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க, நுகர்வோர் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. 'டிவி' மற்றும் பத்திரிகை விளம்பரத்தால், அப்பெண்ணிற்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதால், மத்திய, மாநில அரசுகள், இது போன்ற விளம்பரங்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நுகர்வோர் கோர்ட் அறிவுறுத்தியுள்ளது. நீலகிரி மாவட்டம், குன்னூர், டேன் டீ காலனியைச் சேர்ந்தவர்,

# தலைமுடியை இழந்த பெண்ணிற்கு ரூ.7 லட்சம் நஷ்டஈடு

சுல்தானா (பெயர் மாற்றப்பட்டுள்ளது); விமான பணிப்பெண். இவர், பொடுகு தொல்லை மற்றும் முடி உதிர்தல் பிரச்னையால் அவதிப்பட்ட நிலையில், 'டிவி' சேனல் ஒன்றில் வந்த விளம்பரத்தை பார்த்து, 'பிரபாஸ் வி கேர் இன்ஸ்டிடியூட்' என்ற நிறுவனத்தின், கோவை கிளையை அணுகினார்.

அப்போது நிறுவனத்தின் உரிமையாளர் பிரபா ரெட்டி மற்றும் கோவை கிளை பொறுப்பாளர் ஆகியோர், முதலில், சுல்தானாவின் தலைமுடியை சோதனை செய்து, இப்பிரச்னையை தீர்த்துவிடலாம் என, அறிவுரை வழங்கி, தலையில் தேய்க்கும் சில மருந்துகளை அளித்தனர். பக்கவிளைவுகள் அற்றது என, கூறப்பட்ட நிலையில், சுல்தானா அந்த மருந்துகளை தேய்த்த பின், தலைவலி, தலையில் எரிச்சல், அதிகளவு முடி உதிர்தல் உள்ளிட்ட பிரச்னைகளால் அவதிப்பட்டார். இதுகுறித்து, அந்த நிறுவனத்தாரிடம் கேட்ட போது,வேறுசில மருந்துகளை கொடுத்துள்ளனர். ஆனால், அதிலும் பலனில்லாத நிலையில், சுல்தானாவின் தலைமுடி முழுவதும் கொட்டத் துவங்கியது. இதையடுத்து, மாவட்ட நுகர்வோர் கோர்ட்டை நாடி, 10 லட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரினார். அப்போது, சுல்தானாவிற்கு, 'அலோப்சியா அரேடா' என்ற நோய் மற்றும் மன அழுத்தம் இருப்பதால், இப்பிரச்னை ஏற்பட்டதாகவும், வேறு சில நோய்களும் அவருக்கு இருப்பதாகவும் 'பிரபாஸ்' நிறுவனம் கூறியது.

இதனால், மாவட்ட நுகர்வோர் கோர்ட்,



மனுவை தள்ளுபடி செய்தது. இதையடுத்து, மாநில நுகர்வோர் குறைதீர் கோர்ட்டை, சுல்தானா நாடினார். இந்த மனுவை ஆய்வு செய்த, குறைதீர் மையத்தின் நீதிபதி ரகுபதி, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை சுட்டிக் காட்டி, சுல்தானாவிற்கு, 7 லட்சம் ரூபாய் நஷ்டஈடு மற்றும் மன உளைச்சல் ஏற்படுத்தியதற்கு, 5,000 ரூபாய் ஆகியவற்றை இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மூன்றாவது எதிர்தரப்பாக சேர்க்கப்பட்ட, 'டிவி' நிறுவன இயக்குனர் மீதான புகாரை தள்ளுபடி செய்தார். மேலும், மத்திய, மாநில சுகாதாரத் துறையினர், இது போன்று, பத்திரிகை மற்றும் 'டிவியில் வரும் விளம்பரங்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார்.



தமிழ்நாடு மின்சார வாரிய செயல் பொறியாளரால் அனுப்பப்பட்ட மிகவும் பயனுள்ள தகவல்.

AC யின் சரியான பயன்பாடு:

சூடான கோடை தொடங்கியுள்ளது.

நாம் தொடர்ந்து

ஏர் கண்டிஷனர்கள் பயன்படுத்து கிறோம்.

அதில் சரியான முறையை பின்பற்று வோம்.

பெரும்பாலான மக்கள் 20:22 டிகிரிகளில் தங்கள் ஏசியை இயக்கும் பழக்கம் உள்ளவர்கள். மேலும் குளிர்ச்சியாக இருக்கும்போது, அவர்கள் போர்வையால் போர்த்தி கொள்கின்றனர்.

இது இரட்டை இழப்புக்கு வழிவகுக்கிறது. எப்படி?

நமது உடலின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் என்று உங்களுக்குத் தெரியுமா? 23 டிகிரி முதல் 39 டிகிரி வரை வெப்பநிலையை எளிதில் சமாளிக்க முடியும்.

இது மனித உடல் வெப்பநிலை சகிப்புத் தன்மை என்று அழைக்கப்படுகிறது.

அறையின் வெப்பநிலை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கும் போது, உடல் தும்மல், நடுக்கம், ஏற்படுகிறது.

நீங்கள் 19 20 21 டிகிரிகளில் ஏசியை இயக்கும் போது, அறை வெப்பநிலையானது சாதாரண உடல் வெப்பநிலையைவிட மிகக் குறைவாகவும், உடலின் சில பகுதிகளில் இரத்த ஓட்டம் பாதிக்கவும் உடலில் உள்ள சிறுநீர்ப்பை எனப்படும் செயல்முறையைத் தொடங்குகிறது. கீல்வாதம் போன்ற நீண்ட கால தீமைகள் பல ஏற்படுகின்றன.

பெரும்பாலான நேரங்களில் ஏசி இருக்கும் போது எந்த வியர்வையும் வெளிப்படுவது இல்லை. அதனால் உடலின் நச்சுகள் வெளியே



# AC
## பயன்னுள்ள தகவல்கள்!

வர முடியாத நிலை ஏற்படுவதுடன், தோல் அலர்ஜி அல்லது அரிப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்படலாம்.

இது போன்ற குறைந்த வெப்பநிலையில் நீங்கள் ஏ.சி. இயக்கும்போது, அது 5 நட்சத்திர

தரத்துடன் இருந்தாலும்கூட, தொடர்ந்து முழு சக்தியிலும் இயங்குகிறது, அதிகமான மின்சாரம் உறிஞ்சப்படுகிறது,

ஏ.சி. இயக்க சிறந்த வழி என்ன?

25 டிகிரிக்கு வெப்பநிலை அமைக்கவும்.

25+ டிகிரிகளில் ஏசி இயக்கவும்.

மெதுவான வேகத்தில் விசிறியை வைப்பது சிறந்தது.

இதனால் குறைவான மின்சாரம் செலவாவதுடன், உங்கள் உடல் வெப்பநிலையும் கட்டுப்பாட்டில் இருக்கும். மற்றும் உங்கள் ஆரோக்கியத்தில் எந்தவிதமான பாதிப்பும் இருக்காது.

இதில் மற்றொரு சாதகமாக, கிசி குறைந்த மின்சாரம் சாப்பிடுவதால், மூளையின் மீது இரத்த அழுத்தம் குறையும் மற்றும் சேமிப்புடன் இறுதியில் புவி வெப்பமடைதலின் விளைவுகளை குறைக்க உதவும். எப்படி?

26 டிகிரியில் ஏறத்தாழ 10 லட்சம் வீடுகள் ஏசி



பயன்படுத்துவதன் மூலம் இரவில் ஏசி ஒன்றுக்கு சுமார் 5 யூனிட்களை நீங்கள் சேமிக்கலாம். எனில், நாளொன்றுக்கு 5 மில்லியன் யூனிட்டு மின்சாரம் சேமிக்கப்படும்.

பிராந்திய அளவில் இந்த சேமிப்பு நாள் ஒன்றுக்கு கோடிக்கணக்கான அலகுகள் இருக்கலாம்.

தயவு செய்து மேலே குறிப்பிட்டபடி, உங்கள் ஏ.சி. ஐ 25 டிகிரிகளுக்கு கீழ் இயக்க வேண்டாம். உங்கள் உடலையும் சூழலையும் ஆரோக்கியமாக வைத்திருங்கள்.

பொது ஆர்வத்தில் முன்னனுப்பப்பட்டது

சக்தி மற்றும் சக்தி அமைச்சகம். இந்திய அரசாங்கம்.

# தாத்தா சொந்தமாக சேர்த்த சொத்தில் பேரன், பேத்தி உரிமையிட முடியாது:

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

**தா**த்தா சொந்தமாக சேர்த்த சொத்தில் பேரன், பேத்தி உரிமை கோர முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் வசித்த கனகசபை நாயக்கர் என்பவருக்கு சொந்தமான நிலங்களை, அவர் இறந்த பிறகு மனைவியும், 5 மகன்களும் பிரித்துக் கொண்டனர். 5 மகன்களில் ஒருவரும், அவரது மகனும் சேர்ந்து 1995ல் தனியார் நிதி நிறுவனத்தில் தங்களது நிலத்தை அடமானம் வைத்து ரூ.3.45 லட்சம் கடன் பெற்றனர். அந்த கடன் வட்டியுடன் சேர்ந்து ரூ.14 லட்சமாக உயர்ந்தது. இதனால் அடமான நிலத்தை ஏலம் விட நிதி நிறுவனம் முடிவு செய்தது.

இதை எதிர்த்து நிலத்தை அடமானம் வைத்தவரின் மகள்கள் கலைச்செல்வி, கலைவாணி ஆகியோர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில், அடமான சொத்தில் தங்களுக்கு பங்கு தர வேண்டும் எனக் கேட்டு வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கில் இவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. அதை எதிர்த்து நிதி நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து முன்னோர்கள் சொத்து அல்ல என்றும் இரு பெண்களின் தாத்தா சுய சம்பாத்தியத்தில் சேர்த்த சொத்து என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் தந்தைக்கு முன்னோர்கள் சொத்து என்ற வகையில் சம்பந்தப்பட்ட சொத்து வரவில்லை. சட்டப் பூர்வ வாரிசுகளில் ஒருவர் என்ற முறையில் அந்த சொத்து வழங்கப்பட்டுள்ளது.

இப்பெண்களின் தந்தை அந்தச் சொத்தை அடமானம் வைக்கும்போது, அவரது மகனை சேர்க்க வேண்டியதில்லை. நிதி நிறுவனத்தை எச்சரிக்கும் விதமாக மகனை சேர்த்துள்ளார். அந்த சொத்தில் மகள்கள் உரிமை கோர முடியாது. இந்த வழக்கில் சொத்தில் உரிமை கேட்பவர்கள் எதிர் மனுதாரர்களாக இருந்தாலும் வழக்கை அவர்கள் நடத்தவில்லை. நிதி நிறுவனம் தான் நடத்தியுள்ளது. வேண்டும் என்றே சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் செயல்படுவதாக சந்தேகம் வருகிறது. எனவே, கீழ் நீதிமன்ற உத்தரவு ரத்து செய்யப்படுகிறது என நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah,*Phd*

Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram,
Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )
Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993
E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai



**S. கணேசன்**
மா.து.தலைவர், (கல்வி மேம்பாடு)
94442 33150



**R.வைத்தியநாதன்**
தொடர்பு அலுவலர், மருந்துக்கட்டுப்பாடு மற்றும் நுகர்வோர் நலன்
96770 64648



**அக்னி S. பாலாஜி**
தமிழ்வளர்ச்சி துறைத் தலைவர்
95972 22012



**கங்காதரன் கமலேஸ்வரன்**
மாநில து.ஆலோசகர்
99624 01967



**K.சீனிவாசன்**
மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்
98407 04377



**S. ஜெகன்பாபு**
மாநில உதவிச் செயலாளர்
98842 37456



**R.ராமலக்ஷ்மி**
வடசென்னை மாவட்ட து.செயலாளர்
87545 07035



**S.பாக்யலட்சுமி**
வடசென்னை மாவட்ட பொ.கு.உறுப்பினர்
86083 43417



**B.திருப்பதி**
வ.செ.மாவட்ட செயற்குழு
9444 402318



**S.சுபாஷினி**
செயலாளர், திருவல்லிக்கேணி பகுதி
99412 49377



**A.பிரசாத்**
மாநில துணை அமைப்புச் செயலாளர்
81220 50409



**P. நவநீதன்**
வ.செ.மாவட்ட செயற்குழு
98842 54978



**Dr. D.S.லாரன்ஸ்**
மாநில து. ஒருங்கிணைப்பாளர்
84890 16750




**P.ஆத்மநாதன்**
திருவல்லிக்கேணி கிளைத் தலைவர்
99623 76868



**R. ரங்கராஜ்**
மாநில துணைத் தலைவர்
80722 01959



**T. ரவிச்சந்திரன்**
நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
97518 60699

TMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118

# தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு சென்னை
# தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு துறை

இணைந்து நடத்தும்

## உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழா- 2022

## உணவு பாதுகாப்பு குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

### அழைப்பிதழ்

நாள் : 26-03-2022 சனிக்கிழமை நேரம்: மாலை 5.30 மணி

**இடம் : மேயர் டாக்டர் இராதா கிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியம்**

காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை– 600 008.

**வரவேற்புரை**

திரு : **J.லூர்து சாமி** அவர்கள்

மாவட்டத் தலைவர், திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு

**துவக்கவுரை**

முனைவர் : **D.C.ஜான்இளங்கோவன்** அவர்கள்

மாவட்டத் தலைவர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு மையம்

**தலைமை**

முனைவர் . **செ.பால்பர்ணபாஸ்** அவர்கள்

மாநில தலைவர் – தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு

தேசிய பொதுச்செயலாளர் – அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகம்

**முன்னிலை**

டாக்டர் : **K. கார்த்திகேயன்** IPS., அவர்கள்

காவல் துணை ஆணையாளர், கீழ்பாக்கம் மாவட்டம், சென்னை பெருநகர காவல்

**சிறப்பு விருந்தினர்**

நீதிபதி.உயர்திரு. **துரை ஜெயசந்திரன்** அவர்கள்

மாண்புமிகு உறுப்பினர், மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ்நாடு

**வாழ்த்துரை**

டாக்டர். **P. சத்திஷ்குமார்** M.B.B.S.,M.S (ortho)

நியமன அலுவலர், தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறை, சென்னை

திரு.**R. நெஹிமியா**

உதவி ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை

**நன்றியுரை**

முனைவர்.**சிந்து R.சுப்ரமணியம்** அவர்கள்

திருப்பூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையத் தலைவர்